# அல்இக்லாஸ், அல்ஃபலக், அந்நாஸ்

## சூறாக்களின் தமிழாக்கம்



வெளியீடு:

முஸ்தபா மௌலானா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்இக்லாஸ், அல்ஃபலக், அந்நாஸ்

## சூறாக்களின் தமிழாக்கம்

வெளியீடு:

**முஸ்தபா மௌலானா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

قُلْ هُوَ اللّٰهُ اَحَدٌ ١ اَللّٰهُ الصَّمَدُ ٢ لَمْ يَلِدْ ۙ وَلَمْ

يُوْلَدْ ٣ وَلَمْ يَكُنْ لَّهٗ كُفُوًا اَحَدٌ ٤

## سُوْرَةُ الْفَلَقِ مَكِّيَّةٌ وَهِيَ خَمْسُ اٰيَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

قُلْ اَعُوْذُ بِرَبِّ الْفَلَقِ ۙ ١ مِنْ شَرِّ مَا خَلَقَ ۙ ٢ وَمِنْ شَرِّ غَاسِقٍ اِذَا

وَقَبَ ۙ ٣ وَمِنْ شَرِّ النَّفّٰثٰتِ فِى الْعُقَدِ ۙ ٤ وَمِنْ شَرِّ حَاسِدٍ اِذَا حَسَدَ ٥

## سُوْرَةُ النَّاسِ مَكِّيَّةٌ وَهِيَ سِتُّ اٰيَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

قُلْ اَعُوْذُ بِرَبِّ النَّاسِ ۙ ١ مَلِكِ النَّاسِ ۙ ٢ اِلٰهِ النَّاسِ ۙ ٣

مِنْ شَرِّ الْوَسْوَاسِ ۙ الْخَنَّاسِ ۙ ٤ الَّذِىْ يُوَسْوِسُ فِىْ

صُدُوْرِ النَّاسِ ۙ ٥ مِنَ الْجِنَّةِ وَالنَّاسِ ٦



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 112 – அல்இக்லாஸ் (ஏகத்துவம்)

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய
அல்லாஹ்வின் திருநாமத்தால் (ஆரம்பிக்கின்றேன்)

1) (நபியே நீர்) கூறுவீராக!
அவன் அல்லாஹ் ஒருவனே.

قُلْ هُوَ اللّٰهُ اَحَدٌ ۝١

இவ்வத்தியாயம் சொற்ப வசனங்களைக் கொண்ட சிறு அத்தியாயமேயாயினும் திருக்குர்ஆனில் இது மிகவும் முக்கியமான அத்தியாயமாகும். இதில் கூறப்படும் விஷயங்கள் நபி (ஸல்) அவர்களின் சொந்த அபிப்பிராயமல்ல என்பதையும் மறைவான விஷயங்களை அறிவிக்கும் அல்லாஹ்வின பக்கமிருந்து வெளியானது என்பதையும் ஞாபகமூட்டுவதற்காக 'குல்' சொல்லுக என்ற வார்த்தையைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

சர்வலோகங்களையும் சிருஷ்டித்துப் பாதுகாக்கும் ஒரு கர்த்தா உண்டென்பது மனதில் உற்பத்தி செய்துகொண்ட ஒரு கற்பனைப் பொருள் அல்லவென்பதையும் அது ஒரு நிச்சயமான உள்ளமை என்பதையும் அறிவிப்பதற்காகவே அடுத்தால்போல் 'ஹுவ' அவன் என்ற பதம் கூறப்பட்டிருக்கிறது. அந்த உள்ளமையைத்தான் ''அல்லாஹ்'' சர்வ இலட்சணங்களும் பூரணமாய் அமையப் பெற்ற தனக்கு நிகரில்லாத உள்ளமையை அரபி மொழியில் அல்லாஹ் என்று சொல்லப்படுகிறது. அல்லாஹு அஹத் அல்லாஹ் ஒருவன் தனித்தவன் ஒன்று என்ற பொருளைக் குறிக்க அரபி மொழியில் வாஹித், அஹத் என்ற இருபதங்களும் உபயோகிக்கப்பட்டாலும் இரு பதங்களின் கருத்து வித்தியாசமுண்டு எண்ணிக்கையில் குறைந்த எண்ணாகிய ஒன்று என்பதைக் குறிப்பதற்காக மட்டும் வாஹித் என்ற பதம் உபயோகப்படுகிறது. ஆனால் அஹத் என்ற பதமானது எந்த ஒன்றும் அந்த ஒன்றுக்குச் சமானமாக இருக்க முடியாதோ அந்த ஒன்றே ஒன்றை மட்டும் குறிக்கும் ஒரு மனிதன் என்பதைக் காட்ட ரஜ்லுன் வாஹிதுன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சொல்லாமல் ரஜ்லுன் அஹதுன் என்று சொல்லக்கூடாது. அஹத் என்ற பதமானது தனக்கு எவ்வகையிலும் நிகரில்லாத அல்லாஹ் ஒருவனை மட்டும் குறிப்பதற்காக உபயோகிக்கப்படும் அவன் தனது உள்ளமையிலும் சர்வசக்தி சர்வ ஞானம்

1) அநாதித்துவம் பூரண கிருபை
2) நித்தியத்துவம்
3) சர்வ சக்தி வியாபகம்

முதலிய அவனுக்கே சொந்தமான பூரணச் சிறப்பு இலட்சணங் களிலும் தனக்கு நிகரில்லாத தனித்தவன்

1) ஆரம்பமானவன்
2) என்றென்றும் நிலைத்திருப்பவன்

2) அல்லாஹ் தேவையற்றவன் (அழிவே இல்லாதவன்) اَللّٰهُ الصَّمَدُ ۚ (٢)

"அல்லாஹுஸ்ஸமத்" அவன் தனித்தவனாயிருப்பதுடன் எல்லா வகையிலும் தேவையற்றவன் ஊண் உறக்கம் மனைவி மக்கள் அவனுக்குத் தேவையில்லை எக்காரியத்தை நடத்தவும் யாருடைய உதவியும் எந்த உபகரணமும் அவனுக்கு தேவையில்லை. 'ஸமத்' என்ற பதமானது எவ்வகையிலும் தேவையற்றவன் என்ற பொருள் கொடுப்பதுடன் யாருடைய ஆதரவு எல்லோருக்கும் தேவையிருக்குமோ அவன் என்ற பொருளையும் கொடுக்கும். அல்லாஹ்வின் ஆதரவு இல்லாமல் ஒன்றும் நிலைத்திருக்க முடியாது. என்பதையும் அல்லும் பகலும் அவனுடைய ஆதரவு நமக்கு தேவையென்பதையும் 'ஸமத்' என்ற பதம் ஞாபகமூட்டிக் கொண்டிருக்கிறது.

3) لَمْ يَلِدْ ۙ وَلَمْ يُوْلَدْ ۙ (٣)

அவன் (யாரையும்) பெறவுமில்லை
(யாராலும்) அவன் பெறப்படவுமில்லை

"லம்யலித் வலம்யூலத்" : அவன் (யாரையும்) பெறவில்லை யாராலும் பெறப்படவுமில்லை அல்லாஹ்விற்குச் சந்ததியுமில்லை. தாய் தகப்பனுமில்லை. மனிதனுக்குத் தள்ளாடிய பருவம் வந்தால் அவனுக்கு ஆதரவாயிருக்கவும் அவன் மரணமானபின் அவன் ஆஸ்தியை ஆளவும் அவன் பெயரை விளங்க வைக்கவும் மக்கள் வேண்டியது அவசியம். அல்லாஹ்வுக்கு எக்காலத்திலும் யாருடைய உதவியும் தேவையில்லை. அவனோ சர்வ சக்தியுள்ளவன் அவன் என்றென்றும் நிலைத்திருப்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவனாதலால் அவனுக்கு மரணமும் இல்லை ஆதலால் அவனுக்கு மக்கள் வேண்டிய தேவையுமில்லை. அல்லாஹ்வுக்கு மக்கள் உண்டென்று சொல்லுவது அவனுடைய மகிமையைக் கேவலப்படுத்துவதாகும். இதைப்பற்றி ஹதீதுகுத்ஸியில் நபி (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் பின்வருமாறு அறிவிக்கின்றான்:

ஆதமின் சந்ததியார் என்னைத் திட்டினார்கள் எனக்கு மக்கள் உண்டென்று சொன்னார்கள் நானே ஸமத் (தேவையற்றவன்) ஆகியிருக்கிறேன் (புகாரி)

அல்லாஹ்வுக்குத் தாய் தகப்பனிருந்தால் அவன் புதிதாகச் சிருஷ்டிக்கப்பட்ட பொருளாகும். புதிதாக உண்டாக்கப்பட்ட பொருள் எல்லாவற்றிற்கும் ஆதியானதும் சர்வ சக்தியானதுமான கடவுளாயிருக்க முடியாது.

4) وَلَمْ يَكُن لَّهُۥ كُفُوًا أَحَدٌۢ ﴿٤﴾

மேலும் அவனுக்கு நிகராக எவருமில்லை

அல்லாஹ்விற்கு எவரும் எவ்விஷயத்திலும் நிகராக சமமாக யிருந்ததுமில்லை இருக்கவும் முடியாது. அவனது உள்ளமையிலும் அவனது அறிவு ஞானத்திலும் அவனது சக்தியிலும் அவனது சிருஷ்டிகளில் எதுவும் அணுவிலும் அணுவளவுகூட நிகராக சமமாக ஆகிவிட முடியாது. எத்தனை பெரிய சக்தியுள்ளவனாக மனிதன் இருந்த போதிலும் அவனுடைய சக்திக்கு எல்லையுண்டு அன்றியும் அந்த சக்திகூட அல்லாஹ்வினால் அருளப்பட்டதுதான் அதனால் அல்லாஹ்வின் சக்திக்கு முடிவோ தளர்ச்சியோ பலவீனமோ எதுவும் கிடையாது. ஆகையால் எந்த இலட்சணங்களை எடுத்துக் கொண்ட போதிலும் அதில் இம்மியளவும் அல்லாஹ்வுக்கு நிகராக முடியாதென்பதைத்தான் எவரும் அவனுக்கு நிகராக - சமமாக இல்லை என அல்லாஹ் இங்கு குறிப்பிடுகிறான்.

''வலம் யகுன்லஹு"குபுவன் அஹத்" அவனுக்குச் சமமாக வேறு யாருமே இல்லை என்பது அல்லாஹ்வுடைய உண்மையான அந்தஸ்தை மிகவும் தெளிவாக விளக்கிக் காட்டுகிறது. உலகத்திலுள்ள பல மதஸ்தர்கள் அல்லாஹ்வுடைய யதார்த்த நிலையைத் தெரிந்து கொள்ளாமல் அவனைப்பற்றித் தங்கள் மனம் போனபடி கற்பனை செய்து கொண்டார்கள் மனதில் தோன்றக் கூடிய எல்லாவிதக் கற்பனைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டும் அவன் பரிசுத்தமானவன் என்பதை மேற்கண்ட வாக்கியம் நன்கு எடுத்துக் காட்டுகிறது.

இவ்வத்தியாயம் மனிதன் எப்போதும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டிய முக்கியமான அத்தியாயமாகும். மனிதன் இவ்வுலகத்தில் எந்த நோக்கத்திற்காக சிருஷ்டிக்கப்பட்டானோ அந்த நோக்கம் நிறைவேறி முடிவில் அவன் வெற்றி பெறுவதும் நோக்கம் நிறைவேறாமல் தோல்வியடைவதும் அல்லாஹ்வைப் பற்றி அவன் கொண்டுள்ள விசுவாசத்தைப் பொறுத்தேயிருக்கும். உதாரணமாக அல்லாஹ் மறைவான பகிரங்கமான எல்லா விஷயங்களையும் அறிபவன் சர்வ சக்தியுள்ளவன் அவனுடைய உதவி எல்லோருக்கும் எக்காலமும் தேவையானது. அவன் மனிதர் ஒவ்வொருவரும் செய்யும் நன்மை தீமைகளுக்குத் தகுந்த கூலி கொடுப்பவன் என்ற விஷயங்கள் அல்லாஹ்வைப் பற்றியுள்ள உண்மையான கொள்கைகளாகும். இக்கொள்கைகள் உண்மையானவை என்று ஒரு மனிதன் பூரணமாய் விசுவாசம் கொண்டிருந்தால் அவன் பாவகாரியங்களைச் செய்ய மாட்டான். கெட்ட எண்ணங்கள் மனதில் உண்டாவதற்கும் இடங்கொடுக்க மாட்டான். அல்லாஹ்வுக்கு வழிபட்டு நடப்பான் மேற்கொண்ட கொள்கைகள் உண்மையானவை என்று ஒரு மனிதன் விசுவாசம் கொள்ளாமலிருந்தால் மனம் போனபடி நடந்து பாவத்தில் வீழ்ந்து தன் வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்வான்.

அல்லாஹ் இல்லையென்ற நாஸ்திகமும் ஒன்றுக்கு அதிகமான பல தெய்வங்கள் உண்டென்பதும் ஒரே தெய்வத்திற்கே தனிச் சொந்தமான பூரண சுபலட்சணங்கள் மற்றவர்களுக்கு உண்டென்பதுமான தப்பான கொள்கைகள் அல்லாஹு அஹத் அல்லாஹ் (எல்லா வகையிலும்) தனித்தவன் என்ற வாக்கியத்தாலேயே நிராகரிக்கப்பட்டு விட்டது. அத்துடன் அவ் வாக்கியத்தாலேயே ஏக தெய்வத்தன்மையும் சர்வ பூரண சுபலட்சணங்களும் அல்லாஹ்விற்கு மட்டுமே சொந்தமானவை என்ற உண்மையும் ஸ்தாபிக்கப்பட்டு விட்டது. அல்லாஹுஸ் ஸமத் அல்லாஹ் தேவையற்றவன் என்ற வாக்கியமானது அல்லாஹ்வுக்கு ஊண் உறக்கம் மனைவி மக்கள் காணிக்கை பிற உதவி ஆகிய தேவைகள் உண்டு என்ற தப்பான கொள்கைகளை மறுத்து விட்டது.

யாரையும் அவன் பெறவுமில்லை யாராலும் அவன் பெறப்படவுமில்லை என்ற வாக்கியமானது அல்லாஹ்வுக்கு மக்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய் தகப்பனும் கிடையாதென்பதை ஸ்தாபித்து விட்டது. உலகத்தில் பல மதஸ்தர்கள் அல்லாஹ்வுக்கு மக்கள் உண்டென்று நம்பியிருந்தார்கள் அல்லாஹ்விடமிருந்து வேதங்கள் பெற்றவர்களென்று தங்களைச் சொல்லிக் கொண்டிருந்த யூதர்களும் கிறிஸ்த்தவர்களுமே அல்லாஹ்வுக்கு மகன் உண்டென்று விசுவாசம் கொண்டிருந்தார்கள் யூதர்கள் ஹஜ்ரத் உஸைர் (அலை) அவர்களையும் கிறிஸ்தவர்கள் ஹஜ்ரத் ஈஸா (இயேசு கிறிஸ்து) (அலை) அவர்களையும் அல்லாஹ்வுடைய மகன் என்று உறுதி கொண்டிருந்தார்கள். கிறிஸ்தவர்கள் ஹஜ்ரத் ஈஸா நபி அவர்களை அல்லாஹ்வுடைய மகன் என்று சொன்னதோடு நில்லாமல் அல்லாஹ் என்றும் சொன்னார்கள் இத்தப்பான கொள்கைகள் மேற்கண்ட வாக்கியங்களால் அடிபட்டுப் போயின கடைசியாக அவனுக்கு சமமாக யாருமில்லை என்ற வாக்கியமானது பல தெய்வக் கொள்கையையும் விக்கிரக வணக்கத்தையும் மறுத்திருப்பதுடன் ஒரே அல்லாஹ்வுடைய மகத்துவத்தையும் அவனது தனிப்பெருமையையும் நிலைநாட்டி விட்டது.

தௌஹீத் என்னும் ஒரே அல்லாஹ் விஸ்வாசமே இஸ்லாத்தின் அஸ்திவாரமாகும். ஒரே அல்லாஹ் வணக்கத்தை நிலைநாட்டி மனிதனுக்கு நேர்வழி காட்டுவதற்குமாகவே திருக்குர்ஆன் வெளியாயிற்று ஒரே அல்லாஹ்வைப் பற்றிய மூலாதாரமான கொள்கைகள் இவ்வத்தியாயத்தில் சுருக்கமாக விளக்கப்படிருக்கின்றன. அக்கொள்கைகள் பற்றிய போதனைகள் இவ்வத்தியத்தைக் கொண்டே முடிவு பெற்றிருக்கின்றன. திருக்குர்ஆன் முடிவில் இதற்குப் பின்னுள்ள 113, 114) ஆகிய இரண்டு அத்தியாயங்களும் திருக்குர்ஆனில் கூறப்படும் கோட்பாடுகளுக்கு பங்கம் வராமல் பாதுகாக்கும்படி அல்லாஹ்விடம் வேண்டுதல் செய்யும் பிரார்த்தனைகளாயிருக்கின்றன. எனவே இவ்வத்தியாயம் திருக்குர்ஆனில் மிகவும் விஷேஷமான அத்தியாயமாகும்.

இந்த அத்தியாயத்தின் முழுக்கருத்தும் ஏகத்துவக் கொள்கையின் உளத்தூய்மை பற்றிப் பேசுவதால் இந்த அத்தியத்திற்கு 'அல்இஹ்லாஸ்' உளத்தூய்மை என்ற பெயரும் சில கொடுக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 113 – அல்ஃபலக் (விடியற்காலை)

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் ஆரம்பிக்கின்றேன்.

قُلْ اَعُوْذُ بِرَبِّ الْفَلَقِ ①

(நபியே!) கூறுவீராக!
விடியற்காலையின் எஜமானனிடம் நான் காவல் தேடுகிறேன் (142)

இங்கு அல்லாஹ்வை விடியற்காலையின் எஜமான் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எல்லாவற்றிற்குமே அவன் எஜமானாயிருக்க விடியற்காலையின் எஜமான் என்று இங்கு சொல்லுவதில் பல ஆழ்ந்த கருத்துக்களிருக்கின்றன. விடியற்காலை என்பது இருள் நீங்கி ஒளியுண்டாகும். வேளையைக் குறிக்கின்றது. அல்லாஹ்வினுடைய அனுக்கிரகத்தால்தான் இருள் நீங்கி ஒளி வீசுகிறது என்பதைக் குறிப்பிடவே விடியற்காலையின் எஜமான் என்று கூறப்பட்டிருக்கிறது. இருள் என்றால் சூரியன் மறைந்ததும் உண்டாகும் இருளை மட்டும் குறிப்பிடவில்லை. இரவில் உண்டாகும் இருளைத் தவிர பலவகையான இருள்களும் இருக்கின்றன. உலகமும் அதனில் உள்ள சிருஷ்டிகளும் படைக்கப்படுமுன் எல்லாம் இருள் மயமாகவே இருந்தன. அந்த இருளை நீக்கி சிருஷ்டியென்னும் ஒளியைக் கொடுத்தவனும் அவனேயாவான். அறியாமையும் ஓர் இருளே. மனிதனுக்கு அறியாமை மேலிட்டிருக்கும்போது இது நன்மை இது தீமை என்றுதெரியக்கூடாத இருளில் அவன் இருக்கிறான். அறிவிருந்தும் காமம், குரோதம், கோபம், பேராசை முதலிய துர்க்குணங்கள் மேலிட்டால் அவைகள் அறிவை மறைத்து இருளடையச் செய்கின்றன. மனிதனுக்கு பலவித கஷ்டங்கள் சம்பவித்துத் தயங்கும்போது என்ன செய்வது என்று தெரியாமல் மயங்குகின்றான். இருளிலகப்பட்டவன் எங்கு போவது என்று தெரியாமல் தத்தளிப்பது போல் கஷ்டங்களில் அகப்பட்டவனும் என்ன செய்வது என்று தெரியாமல் திகைக்கின்றான். அவனுடைய அறிவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருள் மூடிக்கொள்கின்றது அல்லாஹ்வுடைய உண்மையான அடியார்கள் அல்லாஹ்வின் மீதுள்ள அன்பின் காரணமாக அவனுடைய வணக்கத்தில் ஈடுபட்டு சதா அவன் நினைவிலேயே சூழ்ந்திருக்கும்போது அவர்களின் தகுதிக்குத் தக்கபடி பலவித ஒளிகளை அகக் கண்ணால் பார்ப்பார்கள். தற்பெருமையின் காரணமாகவோ, ஷைத்தானுடைய மருட்டுதலின் வசப்பட்டதன் காரணமாகவோ அவர் கண்டுகொண்டிருந்த ஒளி மறைந்து இருள் தோன்றும் அந்த இருளையும் நீக்கி ஒளி வீசும்படி செய்பவன் அல்லாஹ்வே மேற்குறிப்பிட்டுள்ள எல்லாவிதமான இருள்களையும் விலக்கி ஒளி கொடுக்க வல்லவன் அல்லாஹ் ஒருவனே என்பதைக் காட்டுவதற்காகவே அல்லாஹ்வை விடியற்காலையின் எஜமான் எனக் கூறப்பட்டிருக்கின்றது.

2) அவன் படைத்தவற்றினுடைய தீங்கை விட்டும் — مِنْ شَرِّ مَا خَلَقَ ﴿٢﴾

143 - இவ்வாக்கியத்தில் அல்லாஹ் படைத்த வஸ்துக்களின் தீங்கை விட்டும் பாதுகாவல் தேடும்படி கூறப்பட்டிருக்கிறது. அல்லாஹ் சிருஷ்டித்த வஸ்துக்களால் மனிதனுக்கு நன்மையோ, தீமையோ உண்டாகலாம். உதாரணமாக நெருப்பை எடுத்துக் கொண்டால் அதனால் மனிதனுக்கு நன்மையும் உண்டு. கெடுதியும் உண்டு. அதேவிதமாய் மழையினால் நன்மையும் உண்டு. கெடுதியுமுண்டு அல்லாஹ் சிருஷ்டித்த வஸ்துக்களால் உண்டாகும் தீங்கு அவனுடைய அனுக்கிரகத்தால்தான் விலகும். அதனாலேயே அவைகளின் தீங்குகளை விட்டு அவனிடம் பாதுகாவல் தேடும்படி கூறப்பட்டிருக்கிறது.

3) وَمِنْ شَرِّ غَاسِقٍ إِذَا وَقَبَ ﴿٣﴾

இருள் பரவும்போது ஏற்படும் இரவின் தீங்கை விட்டும்

144 - அடுத்தபடியாக இருள் வந்து சூழும்போது அந்த இருளினால் வரும் தீங்குகளை விட்டும் பாதுகாவல் தேடும்படி கற்பிக்கப்பட்டிருக்கிறது. இருள் வந்தவுடன் பாம்பு, தேள் முதலிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷ ஜந்துக்களும் புலி, கரடி போன்ற கொடிய மிருகங்களும் வெளிக்கிளம்புகின்ற கள்ளர்களும். வழிப்பறி செய்பவர்களும் தத்தம் தொழிலை நடத்தப்புறப்படுகிறார்கள். ஜின்களும் வெளியே உலாவ ஆரம்பிக்கின்றன. இவைகள் எல்லாமே மனிதர்களுக்குத் தீங்கு செய்பவைகள் இருளில் உண்டாகும் இந்த எல்லா வகைத் தீங்குகளை விட்டும் பாதுகாக்கக்கூடிய வல்லமையுள்ளவன் அல்லாஹ் ஒருவனே-யாதலால் அவனிடமே பாதுகாவல் தேடும்படி இவ்வாக்கியத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

4) وَمِن شَرِّ النَّفَّٰثَٰتِ فِى الْعُقَدِ ﴿٤﴾

முடிச்சுக்களில் ஊதும் பெண்களின் தீங்கை விட்டும்

145 - இவ்வாக்கியத்தில் முடிச்சுக்களில் ஊதும் பெண்களின் தீங்குகளை விட்டும் பாதுகாவல் தேடி ஏவப்பட்டிருக்கிறது. ஒருவருக்கு கேடு உண்டாகும் நோக்கத்துடன் சூனியம் செய்ய எண்ணி மந்திரம் ஓதி முடிச்சுப் போட்டு அதனால் உண்டாக்கும் தீங்கையே இங்கு குறிப்பிடப்படுகின்றது. அத்துடன் துர்க்குணமுள்ள பெண்களின் போதனையால் திடசித்தமுள்ள ஆடவர்களின் மனமும்மாறி அவர்கள் வழிதவறி விடுகிறார்கள். இவ்விருவித தீங்கையும் மேல்கண்ட வசனம் குறிக்கும்.

5) وَمِن شَرِّ حَاسِدٍ إِذَا حَسَدَ ﴿٥﴾

பொறாமை கொள்ளும்போது பொறாமைக்காரரின் தீங்கை விட்டும் (நான் காவல் தேடுகிறேன்)

146 - பொறாமைக்காரன் பொறாமை கொள்ளும்போது அவனால் உண்டாகும் தீங்கைவிட்டும் பாதுகாவல் தேடும்படி ஏவப்பட்டிருக்கிறது தீய குணங்களில் பொறாமை மிகவும் கெட்டது. பொறாமை என்பது மற்றொருவன் நல்ல நிலையிலிருப்பதைப் பார்க்க மனம் சகியாமல் அவன் கெட்டுப்போகவேண்டுமென்று எண்ணுவதாகும். அந்த எண்ணம் மற்றொருவனுக்குக் கெடுதியுண்டாக்கவும். தூண்டுகிறது. பொறாமை நெருப்பைப் போன்றது. அது பட்டவிடத்தை-யெல்லாம் எரித்துவிடும். அதேபோல் பொறமையும், பொறாமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவனுக்கும் யார்மீது பொறாமை கொள்கிறானோ அவனுக்கும் ஆக இருவருக்கும் தீங்கு உண்டாக்கும். இப்லீஸானவன் பொறாமையின் காரணமாக அல்லாஹ்வுடைய கட்டளைப்படி நபி ஆதம் (அலை) அவர்களுக்குச் சிரவணக்கம் செய்யாமலிருந்ததே விண்ணுலகில் தோன்றிய முதல் பாவச் செய்கையாகும். இப்லீஸானவன் தானும் கெட்டுப் போனதுடன் ஆதம் (அலை) அவர்களையும் வழிகெடுத்து விட்டான். இதேபோல் ஆதமுடைய மகன் காபில் தன் சகோதரன் ஹாபில் மீது பொறாமை கொண்டு அவரைக் கொன்றதுதான் இப்பூவுலகில் தோன்றிய முதலாவது பாவச் செய்கையாகும் பொறாமை பல பாவங்களுக்கும் தீங்குகளுக்கும் மூலகாரணமாக இருப்பதால் அதனால் ஏற்படும் தீங்கை விட்டு தப்புவதற்கும் அல்லாஹ்வுடைய பாதுகாவல் இன்றியமையாதது.

## இவ்வத்தியாயத்தின் சிறப்பு

இவ்விரு அத்தியாயங்களின் சிறப்பைப்பற்றி நபி (ஸல்) அவர்கள் இன்று ''அல்லாஹு சுபுஹானஹுவதஆலா'' இந்த வசனங்களை இறக்கி வைத்தான். அவைகள் மிகவும் விஷேசமானவை என எனக்குத் தோன்றுகின்றன. என்று சொல்லி இந்த இரண்டு அத்தியாயங்களின் பெயர்களையும் சொன்னார்கள்'' (கருத்து)

அறிவித்தவர் : உத்பத்திப்னு ஆமிர் (றழி)
(முஸ்லிம், திர்மிதீ)

இந்த இரண்டு அத்தியாயங்களையும் நபி (ஸல்) அவர்கள் காலைத் தொழுகையில் ஓதி வந்திருக்கிறார்கள். இவ்விரு அத்தியாயங்களும் இறக்குவதற்கு முன் அவர்கள் கண் திருஷ்டியைப் போக்குவதற்கு வேறு துஆக்களை (பிரார்த்தனைகளை) ஓதி திருஷ்டிப்பட்டவர்கள் மீது ஊதுவார்கள்.

(திர்மிதி, நஸயீ, ஹாக்கிம்)

இவ்வத்தியாயங்கள் வெளியானபின் இவைகளையே ஓதுவார்கள். நபி(ஸல்) அவர்கள் வியாதிப்பட்டபோதும் இவ்விரண்டையும் ஓதி தங்கள் மீது ஊதிக்கொள்வார்கள்.

சுருக்கம்: முவத்தா, புகாரீ, முஸ்லிம்,
அறிவிப்பவர் : அன்னை ஆயிஷா (றழி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 114 – அந்நாஸ் (மனிதர்கள்)

بِسْــــــــــــــمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் (ஆரம்பிக்கின்றேன்).

1) (நபியே!) மனிதர்களின் இரட்சகனிடம் நான் (பாது)காவல் தேடுகிறேன் எனக்கூறுவீராக! قُلْ أَعُوذُ بِرَبِّ النَّاسِ ①

2) (அவன்) மனிதர்களின் அரசன். مَلِكِ النَّاسِ ②

3) (அவனே) மனிதர்களின் (வணக்கத்திற்குரியவன்) அல்லாஹ் إِلٰهِ النَّاسِ ③

மனிதர்களின் இரட்சகன், மனிதர்களின் அரசன், மனிதர்களின் அல்லாஹ் ஆகிய இம்மூன்று இலட்சணங்களும் உலகையாளும் எந்த மன்னரிடமும் காணமுடியாது. ஏகச் சக்கரவர்த்தியாகிய அல்லாஹ் ஒருவனுக்குத்தான் இத்தகைய இலட்சணங்கள் உண்டென்பதை எடுத்துக்காட்டும் பொருட்டே இவ்வத்தியாயத்தின் முற்பகுதியில் இம்மூன்றையும் ஒருங்கே அல்லாஹ் கூறுகின்றான்.

**மனிதர்களின் இரட்சகன்:**

தாய் வயிற்றிலிருந்து மனிதன் இவ்வுலகிற்கு வருவதற்கு முன்னும் வந்து இவ்வுலகத்தில் வாழ்ந்திருக்கும் காலத்து மனிதனை போஷித்து பாதுகாத்தது யார்? வெளித்தோற்றத்தில் உணவு, தண்ணீர், காற்று முதலியவைகளும் தாய், தகப்பனுமே மனிதனைப் போஷிப்பதாக தெரிகிறது. உணவு தானியத்தையும், தண்ணீரையும், காற்றையும், தாய் தகப்பனையும் உண்டாக்கியது யார்? தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகப்பனுடைய மனதில் பிள்ளையின் மீது அன்பையும், பிள்ளையைப் பாதுகாக்கும்படியான எண்ணத்தையும் உண்டாக்கியது யார்? மழையின்மையால் பஞ்சமேற்பட்டு உயிர்வாழ வழியின்றி மக்கள் வாடும்போது மழையைப்பொழியச் செய்து நாட்டை செழிப்பாக்கிப் பஞ்சத்தைப் போக்குவது யார்? அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லை ஆதனால் அல்லாஹ்வே உண்மையில் மனிதர்களின் இரட்சகனாயிருக்கிறான்.

## மனிதர்களின் அரசன்:

உலகத்தில் எவ்வளவு பெரிய சக்கரவர்த்தியாயிருந்தாலும் அவன் அரசு செலுத்துவதும், அரசாட்சியை விட்டு நீங்குவதும் அல்லாஹ்வின் கையில்தானிருக்கின்றன. அல்லாஹ் நாடினால் ஒரு வினாடியில் வியாதியைக் கொண்டோ, மரணத்தைக் கொண்டோ, யுத்தத்தைக் கொண்டோ, கலகத்தைக் கொண்டோ அவ்வரசனை அரசாட்சியிலிருந்து நீக்கிவிடலாம். இன்றைக்கு அரசராகப் போற்றப்படும் ஒருவர் நாளைக்கு சாதாரண பிரஜையாகவோ, பிரஜா உரிமை பறிக்கப்பட்டு நாட்டை விட்டு விரட்டப்பட்டவராகவோ ஆகிவிடுகிறார். மற்ற மனிதர்களைப்போல் மனித அரசனும் நியாயத் தீர்ப்பு நாளில் தான் செய்த ஒவ்வொரு காரியத்திற்கும் அல்லாஹ்வின் சமூகம் பதில் சொல்லியே ஆகவேண்டும்.

ஆனால் அல்லாஹ்வோ அப்படியல்ல. அவனின் ஆட்சி தனிச்சிறப்புப் பெற்றது. யாருடைய ஆதரவும் உதவியும் இன்றி என்றென்றும் நிலைத்திருப்பது எவராலும் அதை கவிழ்க்க முடியாது. எவருக்கும் எத்தகைய பதில்கூற வேண்டிய அவசியமில்லாதது. இத்தகைய சக்திவாய்ந்த அல்லாஹ்வே உண்மையில் மனிதர்களின் அரசனாயிருக்கின்றான்.

## மனிதர்களின் அல்லாஹ்

மனிதர்களை இரட்சிப்பவனாயும், மனிதர்களுக்கு அரசனாயும் அல்லாஹ் இருப்பதுடன் தனக்கு நிகரில்லாத சர்வசக்தியுள்ளவனாயுமிருக்கிறான். அவன் ஆதரவில்லாமல் யாரும் வாழ முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதையும் செய்ய முடியாது. அதனால் அவனே மனிதர்களின் அல்லாஹ். இவ்வத்தியாயத்தின் முதல் மூன்று வாக்கியங்களில் மனிதர்களின் இரட்சகன், மனிதர்களின் அரசன், மனிதர்களின் அல்லாஹ் என்ற மூன்று நாமங்கள் கொண்டு தன்னிடம் பாதுகாவல் தேடும்படி கூறிய அல்லாஹ் எத்தகைய தீங்கை விட்டும் நாம் பாதுகாவல் தேடவேண்டும் என்பதை அடுத்தாற்போல குறிப்பிடுகின்றான்.

4) مِنْ شَرِّ الْوَسْوَاسِ ۙ الْخَنَّاسِ ۝٤

5) الَّذِىْ يُوَسْوِسُ فِىْ صُدُوْرِ النَّاسِ ۝٥

6) مِنَ الْجِنَّةِ وَالنَّاسِ ۝٦

4) பின்னால் பதுங்கியிருந்து வீண் சந்தேகங்களைக் கிளப்பக்கூடியவனான (ஷைத்தானின்) தீங்கை விட்டும் (நான் பாதுகாவல் தேடுகிறேன்.

5) அவன் மனிதர்களின் நெஞ்சங்களில் வீண் சந்தேகங்களைப் கிளப்பிவிடுகிறான்.

6) இத்தகைய விஷமச் செய்கையாளர் ஜின்களிலும், மனிதர்களிலுமிருக்கின்றனர்.

''நிச்சயமாக மனிதனின் இரத்தம் ஓடும் இடத்திலெல்லாம் ஷைத்தான் ஓடுகிறான்'' (புகாரி, முஸ்லிம்) என்ற நமது நபி (ஸல்) அவர்களின் திருவாக்குப்படி ஷைத்தான் மனிதர்களின் நெஞ்சங்களில், இதயங்களில் புகுந்து கொண்டு பற்பல வீண் சந்தேகங்களைக் கிளப்பிவிட்டு வேடிக்கை பார்க்கின்றான். ''பாங்கு தக்பீர் (அல்லாஹு அக்பர் போன்ற) சப்தத்தைக் கேட்டால் ஷைத்தான் வெகுதூரம் ஓடி விடுகிறான்'' (புகாரி) என்ற நபி (ஸல்) அவர்களின் திருவாக்கிற்கிணங்க ஊசாட்டங்கள், வீண் சந்தேகங்களை உற்பத்தி செய்யும் ஷைத்தான் அல்லாஹ்வை ஞாபகமூட்டும் வாக்கியங்களைச் செவியுற்றதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைதெறிக்க ஓடிவிடுகிறான். இத்தகைய விஷமத்தை, வீண் சந்தேகத்தை கிளப்பி விடும் தொழிலை யதார்த்த (அசல்) ஷைத்தானும், மனித ஷைத்தானும் செய்ய முடியும் என்பதை இவ்வத்தியாயத்தின் பிற்பகுதியில் அல்லாஹ் விளக்கி வைக்கிறான். மனிதனுக்கு தெரியும் வழிகளிலிருந்தும், தெரியாத வழிகளிலிருந்தும் தீங்குகள் வரலாம். தெரியக் கூடாத வழிகளிலிருந்து வரும் தீங்கை விட்டும் மனிதன் தப்பமுடியாது. மனிதனுக்கு இவ்வுலகில் வரும் தீங்குகளும், அவற்றால் ஏற்படும் கஷ்டங்களும் பிரதானமானவையல்ல. அவை சொற்பகாலம் இருக்கக்கூடியவை.

ஆனால் மனிதன் இவ்வுலகத்தில் பாவச்செயலைச் செய்து அதன் பயனாய் மறுமையில் அடையும் தண்டனை மிகக் கடுமையானது. அது நீடித்திருப்பது அத்தண்டனை வராமலிருக்க வேண்டுமானால் மனிதன் பாவம் செய்யாமலிருக்க வேண்டும். மனித மனதிலுண்டாகும் எண்ணங்கள் தாம் மனிதனைப் பாவம் செய்யும்படி தூண்டுகின்றன. மனிதனுடைய மனதில் அந்த எண்ணங்களை உற்பத்தி செய்வது ஷைத்தானுடைய வேலையாயிருக்கின்றது. ஆனதால் ஷைத்தானே மனிதன் மறுமையில் தண்டனையடைவதற்கு மூல காரணமாயிருக்கின்றான். அவனுடைய தீங்கே மனிதனை தன் சொந்த முயற்சியினால் தப்ப முடியாது. அல்லாஹ்வின் பாதுகாவல் இருந்தால்தான் தப்பமுடியும். கண்ணுக்குத் தெரியாத ஜின் கோலத்திலிருந்து கொண்டு மனிதர்கள் மனதில் கெட்ட நினைவுகளையும், வீண் சந்தேகங்களையும் கிளப்பி விட்டு அவர்களைத் தப்பான வழியில் செல்லும்படி ஷைத்தான் செய்து விடுகிறான். அதேபோல் மனித கோலத்தில் வந்து சீர்திருத்தக்காரர்கள் போலவும், மக்களின் நலனை விரும்புபவர்கள் போலவும் வெளிக்காட்டி இஸ்லாத்தின் அடிப்படையான கொள்கையில் ஜனங்களுக்குச் சந்தேகம் வரும்படியான போதனைகளைச் செய்து அவர்களை வழிகெடுத்து விடுகின்றார்கள். சிலர் மஸ்தான், ஞானி என்ற வேஷம் போட்டுக்கொண்டு சரீரத்தால் செய்யும் தொழுகையால் பிரயோஜனமில்லை, மனதிற்குள் தொழ வேண்டுமென்றும், வெளி அசுத்தத்தை சுத்தப்படுத்தினாலென்ன? சுத்தப்படுத்தாதிருந்தாலென்ன? கல்பை (இருதயத்தைச்) சுத்தப்படுத்தினால்தான் கரைசேரலாம் என்றும், தப்பான கொள்கைகளை மத சம்பந்தமான அறிவில்லாதவர்களிடமும், பெண்களிடமும் சொல்லி அவர்கள் மனதில் குழப்பத்தை உண்டுபண்ணி தொழுகையை விட்டு விடும்படி செய்து விடுகின்றார்கள். இவ்விதம் ஜின் கோலத்திலிருந்தும், மனித கோலத்திலிருந்தும் மனிதனைக் கெடுத்துவிடும் ஷைத்தான்களின் தீங்குகளை விட்டும் தப்புவதற்கு அல்லாஹ்வின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாவல் இன்றியமையாதது. இதைக்குறித்து நபி (ஸல்) அவர்களின் பல ஹதீஸ்களிருக்கின்றன. அவற்றின் ஒன்றிரண்டின் கருத்துக்களை மட்டும் இங்கு குறிப்பிடுவோம்.

1) ஆதமுடைய மகனின் இருதயத்திற்குள் ஷைத்தானும் பிரவேசிப்பான். மலக்குகளும் பிரவேசிப்பர். ஷைத்தான் பிரவேசித்தால் தீய காரியங்களைச் செய்யும்படியும், நியாயமாய்ச் செய்ய வேண்டியதைச் செய்யாதிருக்கும்படியும், ஏவிக்கொண்டிருப்பான் மலக்கு பிரவேசித்தால் உண்மையை நிலைநிறுத்தும்படி தூண்டுவார். யாருக்காவது இம்மாதிரியான (மலக்கு பிரவேசிக்கும்படியான) பாக்கியம் கிடைத்தால் அவன் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தட்டும். (ஷைத்தான்) பிரவேசிக்கும்படியான சந்தர்ப்பம் ஏற்பட்டால் துரத்தப்பட்ட ஷைத்தானை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடட்டும்"

(ஹதீஸ் திர்மிதி தப்ஸீர் ஹக்கானி)

2) "இந்த வஸ்துவை யார் உண்டாக்கியது? என்ற கேள்வியை ஷைத்தான் மனிதனின் மனதில் போடுகிறான். இப்படியாக இதையார் உண்டாக்கியது? இதை யார் உண்டாக்கியது? என்ற கேள்விகளைப் போட்டுக்கொண்டே வந்து கடைசியாக அல்லாஹ்வை உண்டாக்கியது யார்? என்று கேட்கின்றனர். இம்மாதிரியான நிலைமைக்கு வந்தபோது (மனிதன்) நான் அல்லாஹ்வின் மீதும் அவனுடைய றசூலின் மீதும் ஈமான் (விசுவாசம்) கொண்டேன் என்று சொல்லிவிட வேண்டும். அதாவது அல்லாஹ்வை யாரும் உண்டாக்கவில்லை. அவன் தன்னால் நிலைத்திருப்பவன் என்று, அல்லாஹ்வும் அவனது ரசூலும் கூறியவைகளை நான் பூரணமாக விசுவாசம் கொண்டேன் என்பது கருத்தாகும்"

(புகாரி, முஸ்லீம் தப்ஸீர் ஹக்கானி)

அல்லாஹ்வே! நான் உன் இரட்சிப்பிலுள்ளவன். உன் அரசாங்கத்திற்கு உட்பட்டவன். உனது அடியான் உனது கிருபையின் மீது சதா காலமும் தேவைப்பட்டவன். வெளிப்படையான தீங்குகளை விட்டும் பாதுகாப்பது போல், ஜின் கோலத்திலும் மனித கோலத்திலும் வந்து எனக்குத்தெரியாமலே என் மனதிற்குள் தீய எண்ணங்களைப் போட்டு வழிகெடுக்கும் ஷைத்தான்களின் தீங்கைவிட்டும் பாதுகாக்கும்படி உன்னை நான் வேண்டுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளம்பிறை - மருதமுனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org